உ
சிவமயம்

REGISTERED AS A
NEWS PAPER IN
CEYLON
P. M. G. No. H. A.
19/300 of 1939

# இந்துசாதனம்

விரோதி வருஷம்
(1889)
ஆவணி மாதம்
28-ந் உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே

புத். ருகூ] யாழ்ப்பாணம் — சர்வசித்து ஞு தை மீ உஅஉ (1948 பிப்ரவரி 10 செவ்வாய்க்கிழமை) [இல அசு

# நாஸ்திகத்தை வேரறுத்த ஞான சூரியன்

## அன்னையின் அருள் பெற்ற அண்ணல்

### பரமார்த்திக குரவர் பரமஹம்ஸர்

(திரு. K. S. நாராயண ஐயங்கார், B. A., B.L.)

உலகத்திற்கே ஒரு சிறந்த வழிகாட்டியாக அமைந்திருந்த இந்துக்களிடையே ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் தோன்றி வாழ்ந்துவந்த காலம் இந்தியாவின் சரித்திரத்திலேயே ஒருஇக்கட்டான தருணம். அவரது அவதாரம் தேவதூதன் வரவுபோன்றது. மக்களை உய்வித்து வாழவைக்க அமைந்ததெனப் போற்றத்தக்கது,

பத்தொன்பதாம் நூற்றாண்டின் (கிறித்துவ சகாப்தம்) நடுப்பகுதியில் புவியினுக்கு அணியெனத்தக்க நாகரிகம் வாய்ந்த இந்துமதத்திற்கேஒரு பேராபத்து விளைந்ததெனத் தோன்றியது. அதற்குமுன் அத்தகைய ஊறு ஒன்றும் நமது நாட்டில் நேரிடவில்லை. அதற்குப் பின்னரும் அதுபோன்ற கேடு ஒன்றும் தோன்றி நம் நாட்டைத் தாக்க முயலவில்லை மிகப் பெருமையுடன் விளங்கி மக்களுக்கு ஞானநலனும் நல்வாழ்க்கையும் நல்கி வந்த ஹிந்துதருமமே நிலைகுலைந்து நசிந்துவிடுமோவென்ற பீதி உண்டாவதற்கு இடமாயிற்று. அக்கால நிலை. இதற்கு ஏதுயாதெனில் மேனாட்டிலிருந்து ஒரு பெரும் புயல் போன்ற புதுக் கொள்கையின் கிளர்ச்சி ஓங்கிப் பரவிப் பாரத நாட்டிலும் நுழைந்த செய்தியேயாம். அதுதான் நாத்திகமென்னும் நூதன இயக்கம். கடவுள் ஒருவர் உண்டோவென்ற ஐயப்பாடோடு நில்லாது, கடவுளை கிடையாதென வாதித்துத் தாபிக்கமுயன்றது அப் புதுமைக் கிளர்ச்சி. இது மக்களிடையே தோன்றி உலகனைத்தினையுமே தாக்கி மக்களது உள்ளத்தையும் வாழ்க்கையையும் பாழ்படுத்தி வந்தது. அவர்கள் தமது கண்முன்னர்க் காண்பதே காட்சியென்றும், கொண்டதே கோலமென்றும் கருதி வந்தனர். இக் கொள்கையானது அதாவது லோகாயுத வாதமானது மக்களதுமனத்தைக்கவர்ந்தது. எங்கு பார்த்தாலும் இக் கொள்கை வெகுவாகச் சூறுவளியின் கடுவேகத்துடன் பரவலாயிற்று, அதன் கொடுமையையும் விசையையும் தாங்கமுடியாதுமக்கள் தவித்தனர்; தமது மதியினைப் பறிகொடுத்தனர். தம் வயமிழந்தனர் அதற்கு ஆட்பட்டு அடிமைகளாயினர். தமது ஒழுக்கம் மாறினர். மதப் புயலின் பயனாகத் தோன்றிய கருத்துக்களின் கொந்தளிப்பினால் பூவுலகின் கண்ணென நின்ற நமது பாரத பூமியும்பாதிக்கப்பட்டது. புதுக்கொள்கைகள் நமது தாய்நாட்டில் புகுந்து பரவி, அங்கே செய்யவந்த அட்டூழியத்தை எதிர்க்கவல்ல மாபுருடர்— சித்தபுருஷர், புண்ணிய புருஷர் நமது ராமகிருஷ்ண தேவராவர். இந்தியாவின் நல்வினைப் பயனால் உலக மக்களின் தவப்பயனால் இச்சாந்தசொருபி தமது ஆன்ம ஒளியின் உச்சமான நிலையில் விளங்கிவந்தார்,

அப்பெரியார் அளப்பரிய ஞான உரமும ஆன்மப்பொருளின் அனுபவ ஆற்றலும் தலைசிறந்த உலகியலறிவின் முதிர்ச்சியும் வன்மையும் ஒருங்கே திகழப்பெற்றவர். அவர் உலகினை உய்விக்க வந்தவதரித்த புண்ணியபுருஷர்; சாந்தமூர்த்தி. ஆத்ம சக்தியாலும், அறிவாற்றலின் திறத்தினாலும், நாவன்மையாலும் வீண் வாதம் செய்பவர்களைவென்று திருத்தியாட்கொள்ளும் ஆண்மையும் பண்பும் வாய்ந்தவர். இவ்வுத்தம புருஷர் நந்நாட்டில் தோன்றி மக்களுக்கு நற்பணியாற்றிப் பெறலரும் பேறுபெற்று விளங்கினார். ஞானநலத்தாலும், பக்திசிரத்தையாலும் தேவியம்மையை அடிப்படுத்தி அவரது ஆராத அன்பைப் பெற்ற அருமபெரும் சேயாவர். அவர் அன்னையின் அருள் நிழலில் வாழ்ந்து வந்த அருள் சான்ற குழவி இப்பெருமான் தமது சிறந்த ஆற்றலாலும், அநுபவ ஞானத்தாலும் பல துறையில் நுணிதாய் ஆராய்ந்துபெற்ற பயிற்சியினாலும் இந்நாட்டிற்குப் புத்துயிரும் புத்துணர்ச்சியும் புதுமையான அற்புத வேகமும் தந்து மக்களது வாழ்க்கைக்கு விழுமிய பேராற்றல் பயந்தார். நாட்டினையும் மதத்தினையும் நன்கு காத்து அவை கேடுறா வண்ணம் ஆண்மையுடன்செயலாற்றி வந்தார் அப்பெருந்தகை. தத்துவ ஞானியும் சிறந்த மத குருவுமான அவர் எதிர்ப்பு மார்க்கங்களைப் பரவவொட்டாது முன் நின்று தடுத்துத் தமது மதத்தை நிலைபெறச் செய்தாலன்றி மக்கள் தங்களது புராதன நாகரிகம். மதப்பற்று, தெய்வபக்தி எல்லாவற்றையும் இழப்பது நிச்சயம எனக் கண்டார். தருணமறிந்து நமது புண்ணியமூர்த்தி இந்து மதத்தின் பெருமையை நிலைநாட்டி நாஸ்திகத்தையொழித்து மக்களது வெறியாட்டங்களைக் கண்டித்து அவர்களை நல்வழிப்படுத்தியது நம் தாய்நாட்டின் பாக்கியமே. அறிவின் முழு நலம் பெற்று அன்னார் உதித்து ஆண்மையுடனும், போராற்றலுடனும், ஆள்வினையுடனும் பெரு முயற்சி கொண்டு இந்துமத தர்மத்தை நிலைநிறுத்தினார். அப்போதிருந்த சூழலோ மக்கள் மனத்தைப் பல துறைகளிலும் கலங்கச் செய்தது. அரசியல் சமூக வாழ்வு, பொருளாதார வாழ்க்கைத் துறை மற்றும் பலபல துறைகளிலுமே பூர்வீகக் கொள்கைகளினின்றும் பிறழுமாறு புரட்சி செய்துவிட்டது. முன்னோர் அறிவு, அவர்தம் நாகரிகப் பண்பு அத்தனையும் பாழ்பட்டுவிட்டது அவர் கண்முன். சமூக வாழ்க்கையின் முதுகெலும்பே முறிந்துவிட்

தொடர்ச்சி 4-ம் பக்கம்

### பிரார்த்தனை

திருச்சிற்றம்பலம்

அச்சாமான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்
ஆனந்த நிலைகளெல்லாம் அறிந்தடைதல் வேண்டும்
எச்சார்பு மாகிஉயிர்க் கிதம்புரிதல் வேண்டும்
எனை அடுத்தார் தமக்கெல்லாம் இன்புதரல் வேண்டும்
இச்சாதி சமயவிகற் பங்களெலாம் தவிர்ந்தே
எவ்வுலகும் சன்மார்க்கப் பொதுவடைதல் வேண்டும்
உச்சாதி அந்தமிலாத் திருவடிவில் யானும்
உடையாயும் கலந்தோங்கும் ஒருமையும் வேண்டுவனே.

—இராமலிங்கர்

திருச்சிற்றம்பலம்

## மதமும் முன்னேற்றமும்

### மதம் அடிமைத்தனத்தை வளர்க்குமா?

[வித்துவான் ச தண்டபாணிதேசிகர்]

உலகியல் சுதந்திரத்துக்கும் மத அடிமைக்குமுள்ள வேறுபாட்டை இக் கட்டுரையாசிரியர் அழகாக எடுத்துரைக்கிறர் இக்கட்டுரை "தொண்டன்" பத்திரிகையி லிருந்து அநுவதிக்கப்பெற்றுள்ளது.

மனம் எதனை இடைவிடாது சிந்திக்கின்றதோ அத்தன்மையடைகிறது. உள்ளமே மனிதனை உருவாக்குகிறது. அதனாலேயே நன்னெறி புகட்டுவார் யாரும் நெஞ்சை முன்னிலைப்படுத்தி யறிவிக்கின்றனர். நினைப்பின் வன்மையே காணப்படுகின்ற கண்கவர் சிற்பங்களோடு கூடிய கற்கோயில்கள், காவியங்கள், ஓவியங்கள், பாலங்கள், இயந்திரங்கள் எல்லாம். ஆதலால் எப்போதும் உள்ள உயர்த்தையே உள்ளச்செய்யவேண்டும். வள்ளுவர்கூட உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் என்கின்றார்.

இத்தகைய உள்ளத்து இழிந்த எண்ணங்கள் நிலவுமானால் மனிதனும் இழிந்தே போகின்றான். அதனின்றும் கரையேற அவன் கருத்துக்களை சார்ந்த பொருள்களால் சீர்திருத்திக் கொள்ளல் வேண்டும். அங்ஙனமிருக்க எங்கும் சுதந்தரம் யாருக்குஞ் சுதந்தரம பேசுகின்ற நாளிலே, 'அடிமையென்றும் தலைமை யென்றும யாருமில்லை நாட்டிலே' என்று அரசியற் கவிஞர்கள் கனவு நனவாகின்ற நாளிலே, சமய நூல்களைப் புரட்டிப் பார்த்தால் எங்கும் அடிமை அடிமை என்றல்லவோ காணப்படுகின்றது. தில்லைவாழந்தணர் தம் அடியார்க்கும் அடியேன் என்ற பாடல்தானே திருமுறை தந்த பாடல்களாகப் போற்றப்பெறுகின்றது 'அடியேனுன் னடைக்கலமே என்றுதானே தன் வசமற்ற தன்மை காட்டப் பெறுகின்றது. அடிமையின் உருத்தானே சமயசாத்திரங்கள். அடிமையின் சின்னங்கள்தாமே மத நுட்பந் தலைக்கேறியவர்கள் அணிகளும், ஆடைகளும், சொல்லும் செயலும் ஆகையால் மதம் அடிமைப் புத்தியைத் தந்து மனிதனுடைய முற்போக்குணர்ச்சியைத் தடுக்கவில்லையா? என்று சீர்திருத்த உலகம் கேட்கிறது. இதுவும் சிந்திக்கவேண்டியது ஒன்றுதான். சிந்தித்த ஒன்று திருத்தியளிக்குமானால் சிந்தை திருத்த வேண்டியதும் ஆவசியம். அப்படிப்பட்ட 'எண்ணத்துடன் கேட்கப்பட்டால் சில கருத்துக்களை யாராயலாம்; அவை அடிமை மனித சமூகத்தில் எப்படியுண்டாயிற்று? அடிமையுணர்ச்சியில்லாத மனிதன் யார்? எங்கிருக்கின்றான்? மதங்களிற்கூறும் அடிமை எப்படிப்பட்டது? இன்றைய உலகியலில் அடிமையில்லையா? மத அடிமையில் விளையும்நன்மையென்ன? மத அடிமை அடிமையா? சுதந்திரமா? என்பவைகளே. இவைகளை முறைபே ஊன்றி நடுவாக ஆராய்ந்தால் அடிமை என்றும் உண்டு. அதிலும் மத அடிமை சுதந்திரமே. அதுதான் உண்மைச் சுதந்திரம் கூட என்ற உணர்ச்சி உண்டாகும்.

அடிமை எப்படி உண்டாகிறது?

மனிதன் தேவைகளாலேயே வாழ்கிறான். தேவையில்லாத மனிதன உலகத்து இல்லை. செல்வனுக்குந் தேவையுண்டு. ஏழைக்குந் தேவையுண்டு. செல்வனுக்கு, அறிவுடையவனது அறிவு தேவை, அறிவாளிக்குச் செல்வன் பணம் தேவை. எப்படியோ ஒருவன் மற்றவன தயவை நாடவே வேண்டியிருக்கின்றது. தேவையிருக்கிற வரையில் குறையுண்டு. குறையிருக்கவே ஒருவனுக்கு ஒருவன் அடிமையாக வேண்டியதே. ஆனால் அடிமையென்று சொல்லாமல் கௌரவமானபேரிட்டு ஊதியம், உதவி, விலை, பண்டமாற்று என்று எப்படியாவது வழங்கட்டும். எதிர்பார்க்கிறவரையில் அடிமையுண்டு. ஏவியடிமையினால் என்ன? இருந்து செய்வது அடிமையானால் என்ன? எல்லாம் அடிமைதான்.

பிறருக்கு அடிமையாவது இருக்கட்டும். மனிதன் தன்னுறுப்புக்கள்

தொடர்ச்சி 4 ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE SAIVAPRAKSA PRESS

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழக தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், சர்வசித்துஸு
தை மீ உஅ உ செவ்வாய்க்கிழமை

## பஞ்சம் நீங்குகிறதா?

உலக இரண்டாம் மகாயுத்தம் தொடங்கியநாள்தொட்டு எட்டு வருட காலமாக இந்நாட்டு மக்கள் அநுபவித்துவரும் உணவுப் பஞ்சம் உடைப் பஞ்சம் இன்னும் மக்கள் வாழ்க்கைக்கு இன்றியமையாப் பொருட் பஞ்சம் முந்தி எக்காலத்திலும் எவரும் பட்டறியாததெனலாம். இந்தக் கொடிய பஞ்சகாலத்திலும் இங்குள்ள மக்கள் பழிபடுதலின்றி ஒருவாறு வறுமையிற் செம்மையாய்க்காலங்கழித்து வருவாராயினரென்று சொல்லலாம். இவ்வளவில் மாத்திரம் கருமம் நின்றுவிடவில்லை; சேற்றிலிருந்து தாமரை பிறத்தல் போலவும், தீமையிலிருந்து நன்மை பிறத்தல்போலவும், துக்கத்திலிருந்து மகிழ்ச்சி யுண்டாதல் போலவும், இந்தப் பொல்லாத பஞ்சகாலத்திலே சில மக்களிடத்திற் செல்வமுந் தோன்றலாயிற்றெனலாம். ஆனல் இந்தச் செல்வம் அறநெறியா லீட்டி யிருந்தாற்றான் நிலைக்கு மென்று காலங்கண்ட முதியோர் சொல்வர்.

இவைகிடக்க, இந்தப் புத்தாண்டு தொடக்கம், இக்கொடிய பஞ்சம் நீங்கத் தொடங்கியிருக்கிறதென எண்ண இடமுண்டு; நெல்லு அரிசி அநுமதிக் கட்டுப்பாடும், விளைவிக்கப்படும் நெல்லில் ஒருபகுதி அரசினருக்கு அவர்கள் விதித்த விலைக்கு விற்கப்படல் வேண்டுமென்ற கட்டுப்பாடும், நெல்லின் விலையை ஆறு ரூபாவிலிருந்து எட்டு ரூபாவென உயர்த்தியதுமாகிய சகாயங்கள், சோரவியாபார முறையிலே அநியாய விலை கொடுத்து அரிசிநெல்லை மக்கள் அரிதிற்பெற்று உண்ணுதலாகிய அக்கிரமத்தைக் குறைத்துவிட்டதெனலாம்; இப்பொழுது நெல் சோரவியாபார முறையிற்றானும் மிகக் குறைந்தவிலைக்கு வாங்கலாமெனச் சொல்லி இங்குள்ள ஏழைமக்கள் மகிழ்ச்சியடைகிறார்கள்; இந் நாட்டிலுள்ள மக்களின் சீவாதாரமாகவுள்ள அரிசி நெல் விலை குறையுமானல் ஏனைய பொருள் பண்டங்களின் விலையும் தாமே குறையத் தொடங்குமென்பது அருத்தாபத்தியால் அறியத்தக்கதாம்.

கொடிய பஞ்சமுங் கஷ்டமும் நேர்ந்த காலத்திலும், அப்பஞ்சம் மெல்ல மெல்லக் குறையத் தொடங்கிய இக் காலத்திலும் இங்குள்ள மக்களுள் ஒருசாரார் நாத்திகம்பேசத் தலைப்பட்டிருத்தலும் தொன்மையான தூய கொள்கைகளைத் தகர்த்தெறிய முயல்வதும் அநர்த்தமானசெயல்களாகும். இறைவன் மக்களை ஈடேற்றுதற் பொருட்டுத் தண்டிக்கும் மார்க்கமே கொடிய யுத்தமும் பொல்லாத பஞ்சமுமெனச் சொல்லுதல் பிழையாகாது; யுத்தத்திற்காகிய உற்பாதங்கள் அறவே நீங்கிவிட்டனவென நாம் எண்ணி மகிழவொண்ணாது; யுத்தத்தின் பயன் உலகப் பஞ்ச மென்பதையும மறந்துவிடவொண்ணாது. மக்களனைவரும் இறைவனருள்வழி நிற்கத் துணியின், எவ்வகையான யுத்தமும் பஞ்சமும் இடருமில்லையாம்.

இவை இங்ஙனமாக, பஞ்சகாலம் நீங்கத் தொடங்கியதெனினும், அரிசி நெல் புடைவை என்னுமிவைகளின் விலை குறைந்துவரத் தொடங்கிவிட்டதெனினும், கட்டுப்பாடுகளுட் பல நெகிழ்க்கப் படலாயின வெனினும், தொழில் செய்வோர் கூலிவேலை செய்வோ ரென்னுமிவர்கள் தாங்கள் பெற்றுவரும் வேதனத்தையே இன்னமும் பெறவேண்டு மென்ற நோக்கமுடையவர்களாகக் காணப்படுகின்றனர்; இவர்களே மக்களுட் கூடிய தொகையினராவர்; இவர்கள் தாமாகவே அகவிலை முதலியற்றை யுணர்ந்து தங்கள் வேதனத்தையும் கூலியையும் முன்னரைக் காட்டிலும் குறைத்து வாங்க நினைப்பரேல், சில வருடங்களாக இந்நாட்டு மக்களைப் பீடித்து வருத்திய பல வகைப்பஞ்சமும் விரைவில் நீங்கத் தலைப்படுமென்பது நிசம்.

## ஜப்பானியப் பொருள்கள்

### மீண்டும் பெறலாம், ஆனல்...

ஜப்பானில் எல்லாம் மலிவான விலையிற் கிடைக்கும்; ஆனல் அவற்றை வாங்க டாலர் (அமெரிக்க நாணயம்) வேண்டும். இப்போதுள்ள பணமாற்று நிலையில், இப் பொருள்களைப் பெறுவதற்கு இலங்கையில் டாலர் இல்லை என்று ஜப்பானிற் சுற்றுப்பிரயாணம் செய்து அங்குள்ள உற்பத்திப் பொருள்களின் நிலைமையை அவதானித்துத் திரும்பிய, இலங்கைச் சிங்கள வர்த்தக சங்கக் காரியதரிசியான திரு. டபிள்யூ எச் புத்ததாஸ ஓர் பத்திரிகை நிருபர்க்குக் கூறினர்

ஜப்பானில் யந்திரசாதனங்கள், கத்தி வகைகள், ரசாயனப் பொருள்கள், பதப்படுத்திய உணவுப்பொருள்கள், துணிகள் முதலிய பொருள்கள் எல்லாம் மலிந்த விலையிற் பெறற்பாலன; ஆனல் டாலர்க் கஷ்டத்தினல் அவற்றைப்பெற்று இங்கே இறக்குமதியாக்க முடியாது இருக்கின்றன என்று ஸ்ரீ புத்ததாஸ கூறினர்.

மேலே சொலலியவாறு பொருள்கள் மிகவும் மலிவாக இருந்தபோதிலும், அங்கே சீவியச்செலவு மிகவும் அதிகரித்து இருக்கிறதாம். ஒருநாளைக்கு ஒரு ஆளுக்கு 50 ரூபாவரையில் சீவியச் செலவு பிடிக்கிறதாம்,

ஜப்பான் யுத்தத்தில் ஈடுபட்டபடியால் தானே இக்கேவல நிலைமை எற்பட்டதென்று ஜப்பானியரில் ஓர்பகுதியார் மனக்கொதிப்படைந்திருக்கின்றனர். ஜப்பான் தோல்வியுற்றதையிட்டு இன்னோர் சாரார் மிகவும் கவலையுடன் இருக்கின்றனர். எப்படியாவது தம் நாட்டை வர்த்தக விஷயத்திலும் அரசியல் விஷயத்திலும், முன்னைய உன்னத நிலைக்குக் கொண்டுவரவேண்டு மென்று ஜப்பானியர் ஆவலுடன் இருக்கின்றனர். இவ்விஷயத்தில் அவர்கள் ஊக்கத்துடன் கருமம் ஆற்றி வருகின்றனர் என்று ஸ்ரீ புத்ததாஸ தெரிவிக்கின்றார்.

# செயல் வீரன் காந்தி

(வித்துவான் வேந்தனர்)

அன்புநெறியால் உலகை ஆளக்கண்ட உண்மைத் தொண்டன் அகிம்சா மூர்த்தி மகாத்மா காந்தியைப் பறிகொடுத்த செய்தி அகில உலகத்திலும் அதிர்ச்சியையுங் கிளர்ச்சியையும் ஆக்கிவிட்டது, எங்கும் அன்பும் அவலமும் அழுகையுங் கலந்த ஆண்மைக்குரல் அலைமெறிகின்றது. உலகமே பெருந்தவம் செய்து பெற்ற புதுமைப் படைப்பை, தன்னலமற்ற உண்மைத் துறவியை எவரால் மறக்கமுடியும். மக்களை மக்கள் அடக்கி ஆளும் அடிமை ஆட்சியை அன்பொடு கலந்த அகிம்சைப்போரால் அறத்தொலைத்த அறிவுக்கதிரவன் ஆவியைப் பலிகொடுத்தோம். இந்தியாவின் விடுதலைப் போரால் உலகின் விடுதலைக்கே உழைத்த மகாத்மாவின் உயிர் பாரதநாட்டிலேயே பலியிடப்பட்டசெயல் வருந்தத் தக்கது. பாரதத்தின் தெய்வீகப் பண்பு ஒளிவிட்டு உலகை ஆளக் கண்ட எங்கள் தவப்பயனை, மெய்யறிவுச் சுரபியை, ஆத்தும சக்திக்கனலை அணுக்குண்டின் ஆற்றலினும் பெரிய அருள் ஆற்றல்வாய்ந்த செயல்வீரன் காந்தியை, என்றும் உலகம் மறக்காது. மறந்துவாழ முடியாது.

பாரதத் தாயின் சுதந்திரக் கொடி உலகமெங்கும் நிழலிடுகின்ற இன்று, உலகிற் பெரியோன் மகாத்மாகாந்தி தம் உயிரைப் பாரதநாட்டின் ஒற்றுமைக்காகப் பலியிட்டார். படுகொலைப் பட்டார். காந்திஅடிகள் தமது உயிரை எக்கொள்கையின் பொருட்டுப் பலியிட்டாரோ, அதே கொள்கையைப் பாரதநாடு உலகம் உள்ளளவும் போற்றவேண்டும். மகாத்மா காந்தியின் விருப்பம் இதுவே. இவ்வாறன்றி நெஞ்சில்இன்றி நாவால் வீரம் நேரமொன்று கூறுகின்ற வெறும் விரிவுரைக் கூட்டங்களால் பாட்டுக்களால் காந்தியக் கொள்கை உலகிற் பரவமாட்டாது. வஞ்சமின்றி எல்லோரும் ஒன்று சேரவேண்டும். "கஞ்சியின்றி கொந்தலைந்து கதறுகின்ற குரலிலே விஞ்சுகின்ற சுதந்திரத்தின் வீரநாதங் கேட்கவேண்டும்" உயிர்போகினும் இழிவுகொண்ட மனிதன் இந்த உலகில் இல்லையெனற கொள்கையைப் பரப்பவேண்டும. அன்பும் தொண்டும் அறிவும உலகை ஆளப் பார்க்க வேண்டும,

"தொண்டு செய்திடச் சேருங்கள்
தோளைத் தட்டியே வாருங்கள்,
இன்று சுதந்திர தாகத்தால்
எத்தனை பேருயிர் விடுகின்றார்"
கொலைகள் செய்வதும் வீரமோ
கொள்ளை அடிப்பதும் வீரமோ
நிலைமை தளர்ந்துயிர் போகினும்
நேர்மையைக் காப்பது வீரமே,

என்று தொண்டர்களைக் கூவி அழையுங்கள். அஞ்சாமை தவழும வீரநெஞ்சுடன் அகிம்சைப்போரை ஆற்றுங்கள். புரட்சிப்புயலை எதிர்த்துக் காந்தீயக்கொள்கையைப்பரப்ப வேண்டும், அபலவர் தூற்றலையும், போற்றலையும் எதிர்பாராது அறத்தொடு கலந்த அன்புப் பணியினலேயே உலகை ஆளக்கண்டார் காந்தி. அதுவே ஆத்மசக்திப்படை. அடிகளின் ஆத்மசக்தி மறையவில்லை. அது உலகமக்களின் உயிருடன் ஊறிக் கலந்துவிட்டது. அதன்தோற்றம் இன்று எங்கும் காணப்படுகின்றது. பேசப்படுகின்றது. ஒலிஅலையிற் கலந்து வானகம முழுதும நாதம் எழுப்புகின்றது, மன்னுயிர்களின் பேச்சிலும் மூச்சிலும் காந்தியச்சக்திக்கனல் ஒளிவிடுகின்றது. காந்தீயச் சக்திக் கனலில் தோய்ந்த உலகம் புதியமலர்ச்சி பெற்று விளங்குகின்றது. புதுமை உலகம் காந்தீயச் சக்திப் பண்பாகவே மாறுகின்றது.

வாழ்க காந்தீயக்கொள்கை. காந்தியின் கொள்கைகள் எங்கள் உயிரில் கலந்து ஆற்றல்தர வேண்டும். அப்பொழுதுதான் உண்மைக் காந்தீயந் தோன்றும. உலகம் வாழும். செயல் மலரும். நாங்கள் காந்தியாகவேண்டும். எங்களுள் காந்தியைக் காண வேண்டும். காந்தி வெறும் பேச்சு வீரனல்ல. செயல்வீரன் நாங்கள் செயல் வீரராகவேண்டும்.

தொல்லைபோன சாதி சமயக்
கொடிய போர்கள் ஒழியவே
உள்ள மாரக் காந்தி போல
உயிருங் கொடுக்க வேண்டும் நாம்,
செல்வ னென்றும் ஏழை என்றும்
செப்பு கின்ற கொள்கையைக்
கொல்வ மென்று காந்தி சொன்ன
கொள்கை போற்ற வேண்டும்நாம்,
விடுதலைக்கே உயர்கொடுத்த
வீர னெங்கள் காந்தி போல
அந்நெருப்பிற் கொடிய துன்பம்
அடைந்து வாழ வேண்டும் நாம்,
உலக மக்கள உயிரில் ஊறி
உணர்வு தந்த காந்தியின்
தலைமையான கொள்கை சாகில்
சகமும் சாதல் திண்ணமே,
அடிமை ஆட்சி முடியக் கண்ட
ஆத்ம சக்திப் படையினல்
படியில் மாட்சி கொண்ட காந்தி
பாரதத்தின் சோதியே,
உண்மையே உள்ள மட்டும்
உயரறம் ஓங்கு மட்டும்
தண்மையே ஆளு மட்டும்
சான்றவர் வாழு மட்டும்
கண்ணினுற் கண்ட காந்திக்
கதிரவன் எம்மோ டிந்த
மண்ணிலே உள்ளான் என்றும்
வாழ்கவன் கொள்கை எல்லாம்,

என்றும் வழிபாடு புரிவோம். உலகிற் பெரியோன் மகாத்மா காந்தி. உண்மைத் தொண்டன் மகாத்மா காந்தி. செயலில் வீரன் மகாத்மா தேசத்தொண்டன் மகாத்மா காந்தி. சாதியரான் மகாத்மா காந்தி. சமரச ஞானி மகாத்மா காந்தி. சத்திய விரதன் மகாத்மாகாந்தி சாந்தமூர்த்தி மகாத்மா காந்தி. அகிம்சாமூர்த்தி மகாத்மா காந்தி. அறிவிற் பெரியோன் மகாத்மாகாந்தி. கீதை நேசன் மகாத்மாகாந்தி. கிழோர் துணைவன் மகாத்மா காந்தி என்று ஆர்ப்பரியுங்கள். மகாத்மா காந்திக்கு ஜே! ஜே!!

வாழ்க காந்தீயம்.

## "காந்தி நகர்"

பாட்னு பிப் 5—

தேசத்தின் பிதாவான மகாத்மாஜியின் ஞாபகார்த்தமாக டில்லி என்ற பெயரைக் 'காந்தி நகர்' என்றுமாற்றி யமைக்க வேண்டு மென்ற தீர்மானத்தைக் காங்கிரஸ் காரிய நிர்வாகசபைக் கூட்டத்தில் பிரேரிக்கும்படி இந்திய தேசீய காங்கிரஸ் அக்கிராசனர் டாக்டர் இராஜேந்திரப் பிரசாத்தை பீகார் ஹரிசனசேவா சங்கக் காரியதரிசி ஸ்ரீ நாகேந்திர நாராயணன் சின்கா, கேட்டுக்கொண் டிருக்கிறார்.

## சுதந்திரதின விழா.

மேற்படி விழா (4-2-48) புதன்கிழமை காலை 9 மணி தொடக்கமாக, காரை மாணிக்கவாசக விதாலயத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடப் பெற்றது. 10 மணிக்குத் தலைமையாசிரியர் திரு. க. சிற்றம்பலம் அவர்கள் தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் ஆரம்பமாயது. தலைவர் விழாவைப் பற்றிய விசேடத்தை எடுத்துக் கூறிப் பெருமானைக் கருப்பூராராதனை யோடு வணங்கச் செய்தனர். ஆசிரியர் திரு சி. செல்லையா அவர்களால வித்தியாதிபதியவர்கள் அனுப்பிய பத்திரம் வாசிக்கப் பெற்றது. மாணவர் கீதம் பாடினர். பிறகர் திரு.சி. ஆறுமுகம் அவர்கள் குறிப்புரையோடு கூட்டம் 12 மணி அளவில் நிறைவெய்தியது.

கடிதம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க சுதந்திரம்! வாழ்க ஸ்ரீ லங்கா!

## பாரதவீரனின் நல்லாசி

### ஆசியாக் கண்டத்தின் உத்வேக எழுச்சி

உலகத்தின் பழம்பெருங் கண்டமாய், உலகத்துக்கே அன்னையாய் விளங்கும் ஆசியா இன்றுவிழிப்படைந்துவிட்டது ஓர்புரா் சிகரமானமார்றம்அவள் முகத்தில் வந்துவிட்டது, ஆற்ருெணுத் துன்பத்திலிருந்தும், சொல்லொணு இடுக்கண்களிலிருந்து, அடிமைக் குழியிலிருந்தும், அந்த ஆசியா அன்னை இன்று சுதந்திர தேவியாக மிளிர்கிருள்; அவள் அடிமைக் குழியைவிட்டக ன்று தன் சுதந்திர ஸ்வரூபத்தைக் காட்டுகிருள். அப்படிக் காட்டுவதன் ஓர் அம்சமே ஸ்ரீலங்கா இன்று அடைந்துள்ள சுதந்திரம்

என்றிவ்வாறு பாரதநாட்டின் முடிசூடாமன்னன், பண்டிதஜவஹர்லால்நேரு இலங்கைச் சுதந்திரதினவிழாவையொட்டியனுப்பியுள்ள செய்தியிற் குறிப்பிட்டு, மேலும் தெரிவிப்பதாவது:

"ஆசியாவின் சுதந்திர வளர்ச்சி மிகவும் மந்தகதி யுடையதுபோலத்தான் எமக்குத் தோன்றியபோதிலும், சரித்திர சம்பவங்களைக் கொண்டு அதனைப் பார்ப்போமானல் அந்த வளர்ச்சி உண்மையில் தீவிரமானதென்றே கூறவேண்டும்

"இந்தனேஷியாவிலே, சுதந்திரத்தை நசுக்க, அதனைப் பறிமுதலாக்க, அதனை இந்தனேஷியர்க்கு இல்லாமற்செய்ய எத்தனையோ சூழ்ச்சிகள் நிகழ்ந்தன; எத்தனையோ பேராபத்துக்கள் சூழ்ந்தன. ஆனல் ஈற்றில் அவையெல்லாம்சின்னபின்னமாக, இந்தனேஷிய மக்களின் சுதந்திரப் போராட்டம் நாளுக்குநாள் வலுவடைய, அதன் பயனுகச் சுதந்திரப் பிரவாகம் அங்கே பெருக்கெடுத்துவிட்டது. இனி அதனைத் தடுக்க எவராலும் முடியாது.

"பாரத நாட்டிலே சென்ற ஆண்டு ஆகஸ்டுமாதம் 15-ம் திகதி ஓர் மகத்தான மாற்றத்தை உண்டாக்கியது. பன்னெடுங்காலம் அடிமைக் குழியிற் கிடந்து தவித்த ஆரிய நாடு தன் பலம்கொண்டு நிற்க ஏற்பட்டது.

"3 வாரங்களுக்குமுன், பர்மா தன் அடிமைத் தளையை அறுத்தெறிந்துவிட்டது. அந்தச் சந்தர்ப்பத்திலே, அந்த சரித்திரப் பிரசித்தி வாய்ந்தசமயத்திலே நாமும் பர்மிய மக்களுடன் சேர்ந்து ஆநந்தமடைந்தோம்.

"பூர்வ காலம்தொடக்கம் சிறும் சிறப்பும் பெற்றுப் பொன்னுடெனப் பொலிவுபெற்று விளங்கிய ஸ்ரீலங்கா இன்று சுதந்திரயடைகிறது. இந்த மகத்தான மாற்றத்தைக் கண்டு பாரதநாட்டைப்போலச் சந்தோஷமும் ஆநந்தமும், உற்சாகமு மடையக்கூடிய நாடு பிறிதொன்றில்லை எனக் கூறலாகும். என்? பூர்வகாலம தொடக்கம் இலங்கை இந்தியா என்னும் இரு நாடுகளும் அண்ணன் தம்பிபோலவே வாழ்ந்துவந்தன, இன்றும் பாரதநாடு ஸ்ரீலங்காவை ஓர்தம்பி என மதித்தே நடந்துவருகிறது. எந்தவிதமாகப் பார்த்தாலும் — பூகோள அமைப்பு விஷயமாகவோ, சரித்திரபூர்வமாகவோ, கலைஞானம் பற்றியோ, சமயத் தொடர்புபற்றியோ, பொருளாதாரச் சம்பந்தத்தைப்பற்றியோ—பார்த்தாலும், அன்றுதொட் டின்றுவரை, இந்த இரு நாடுகளும் ஒன்றுக்கொன்று மிகவும் நெருங்கிய தொடர்புடையனவாகவே இருக்கின்றன. இந்தத் தொடர்பு—பூர்வகாலம் தொடங்கியிருந்த உறவு—இரு நாடுகளும் சுதந்திரமடைந்துள்ள புதிய சகாப்தத்திலே இன்னும் நெருங்கியதாக இருக்கும் என்றே சந்தேகமின்றி நம்புகிறேன்.

"தென்கிழக்கு ஆசியபீடத்தின் மத்தியிலேயே இந்தியாவும் இலங்கையும் விளங்கி ஓர் கேந்திர ஸ்தானத்தை வகிக்கின்றன. பாரத ஹிந்து மகாசமுத்திரமே இந்த இரண்டு நாடுகளையும் சூழ்ந்துள்ளது பெரிய வர்த்தகக் கப்பல்கள் யாவும், இந்த இரண்டு நாடுகளையும் கண்டே போகின்றன, உலகத்தின் வர்த்தகப் பாதைக்கு இரண்டும் முக்கிய ஸ்தானமாக மிளிர்கின்றன. இவற்றின் பயனுக, தெற்கு ஆசியாவில்—தென்கிழக்கு ஆசியாவில் முக்கிய ஸ்தானம் வகிக்கும் இந்த இரண்டு நாடுகளுக்கிடையேயுள்ள தொடர்பு இன்னும் பலமாக உறுதியாக்கப்படும்,

"இலங்கை —இந்தியா என்னும் இரு நாடுகளுக்குமிடையே மாத்திரம் அதிகம் ஒற்றுமையல்ல, மற்றும் தெற்கு ஆசியநாடுகளுக்குமிடையே பரஸ்பரம் ஒத்துழைப்பும் ஐக்கியமும் நிலவவேண்டுமென்றும் நாம் பிரார்த்திக்கின்றேம், அந்த ஐக்கியம் அந்தஒற்றுமையின் பயனுக உலகிலேயே தங்சுதிரத்தையும், சமாதானத்தையும் நிலைநிறுத்தும் லட்சியத்தை நாங்கள்பூர்த்தியாக்கமுடியும்.

"இந்த மகத்தான சந்தர்ப்பத்திலே, இலங்கை மக்களுக்கு என் வணக்கத்தைத் தெரிவிக்கிறேன்; அவர்களடைந்துள்ள சுதந்திரத்துக்குத் தலை வணங்குகிறேன் வாழ்க ஸ்ரீலங்கா! வாழ்க இலங்கைமக்கள் ஜேய் ஹிந்த்.

### விவேகாநந்த ஜயந்தி

இற்றைக்கு நாற்பத்தாறு வருடங்களின் முன்னும் நாற்பத்தெட்டு மணித்தியாலங்களின் முன்னும் இரண்டு பெரிய மணிகளை நமது நாடு இழந்தது. அம்மணிகள்தான் நமது கண்மணிகள்போன்ற சுவாமி விவேகாநந்தரும், சாந்த மூர்த்தி காந்தியடிகளுமென்று கடந்த (1-2-48) ஞாயிற்றுக் கிழமை மாலை 6 மணிக்கு மட்டக்களப்பு சைவமகாசபையின் சார்பாக மட்டக்களப்புவிவேகாநந்த மண்டபத்தில் நடைபெற்ற விவேகாநந்த ஜயந்திக் கூட்டத்தில் திரு. கண்ணனடிகள் குறிப்பிட்டார்கள். அவ்வமயம் கிழக்குமாகாண அதிபர் D. C. R குணவர்த்தன அவர்கள் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார்கள். கூட்டம் தொடங்குமுன காந்தியடிகளின் பிரிவுகுறித்து மூன்று நிமிஷங்கள் மௌனம் சாதிக்கப்பட்டது பல நூற்றுக்கணக்கான மக்கள் கூட்டத்திற்குச் சமுகமாயிருந்தனர் ஈற்றில் ஸ்ரீமத் சுவாமி நடராஜானந்தா அவர்களின் நன்றியுரையின்பின், தேவார பாராயணத்துடன் கூட்டம் நிறைவெய்தியது. — கடித

## எந்தை எங்கே? எங்கள் காந்தி எங்கே?

(பண்டிதமணி க. சு. நவநீதகிருஷ்ண பாரதியார்)

உன்நெஞ்சில் உன்வயிற்றில் ஊடுருவிப் பாய்ந்ததுண்டு
தந்நெஞ்சில் தம்வயிற்றில் தான்பாய்ந்த—தென்றெண்ணி
மன்உலகம் ஏங்கியே மாய்கின்ற தையையோ
என்செய்வேம் காந்தி! இயம்பு.

நிறைபடைக்கும்அடங்காதபெருங்கலகம் காட்சியினல்நீக்குவோர்யார்?[யார்?
கறையகல நமதுகண்டம்தனைத்தூய்மை செய்தோளியாற் கவின்செய்வோர்
முறைநிறுவநாமாட்சிப்பொறைபொறுப்பேம் நாம்என்னமுன்னிற்போர்யார்?
அறிவுரைக்க இனியாவர் காந்திமன்னு அகன்றெம்மை அழச்செய் தாயே,

அன்புதனைக் கொன்றதென ஆருளைக் கொன்றதென அறத்தைச் சீறி
முன்பின்அறி திறன்இன்றிக் கொன்றதென உடலோடுயிர் முயங்கி வாழும்
இன்பநிறை வாழ்க்கையுடன் ஆண்டவனைக் கொன்றதென எமமா தாவை
மன்பதையைத் தேவாக்கும் காந்தியடிகளைக்கொன்ற வகையா தும்மே.

படைநமனும் வன்சொல்லும் சுடுஞ்சினமும் கொடுங்கோலும் பதறிட்ட
நடைவலியால்இன்சொல்லால் பொறுமையினல்வெற்றிகொண்டநயத்தைக்
இடையிலினிக்குறையிலேஎன்றிருக்க[இந்தஇடி இடித்ததென்னே [கண்டே
உடையவனே காந்திஎம்மான் இதுநனவா கனவாஎன் றுரைத்தி டாயே,

நாட்டுடையால் உப்பெடுப்பால் சுதந்தரத்தைப் பெறுமாறு நம்மை ஊக்கு
மீட்பரிய பாரதத்தை மீட்டுநம்மை யாட்சிசெய விடுத்த வள்ளல்
காட்சியினற் கடவுளைநாம் கண்டதெனத் தனைக்காட்டிக் கவலை தீர்த்து
மாட்சியெலாம் தருமகாந்திக் கிதுமுடிவோ? திருவருளும் மாண்ட தேயோ?

புன்னகையின்பொலிவெங்கே? அருளூற்றின்இதயமெங்கேபொறுமைஎங்கே
மன்பதையின்ஒற்றுமைக்காஉண்ணுது சாக்கிடந்தவயரம்எங்கே? [எங்கே
பொன்றிடினும்பொறுத்துவக்கும்பெருமை எங்கே?ராம் எனும்வாய்ப்புனிதம்
இன்பாச மொழிஎங்கே? எந்தைஎங்கே? காந்திஎங்கே? என்செய்வோமே?

இனியேனும் சாந்தியத்தை எல்லோரும் வழுவாமல் எண்ணி நோற்றல்
தனியான காந்திமகான் உயிர்படைத்த எலாவடிவாய்த் தாங்கி நிற்பான்
சனியான பழிநீங்கி விழிதிறக்கும் வழியுமுண்டு தாங்க ஒண்ணு
அநியாயச் சாவகன்று காந்தியடி களுக்குய்யும் ஆறும் உண்டே,

## இலங்கையில் இந்தியர்

### இந்தியப் பாராளுமன்றத்திற் கேள்வி

சென்றவாரம் இந்தியப் பாராளுமன்றம் கூடியபோது, ஸ்ரீஜுத் ஆர். கே. ஸித்வா இலங்கைவாழ் இந்தியர் விஷயமாகப் பண்டிதர் நேருவைச் சில கேள்விகள் கேட்டார் இலங்கைவாழ் இந்தியரின் பிரஜாவுரிமைபற்றியும், தோட்டத் தொழிலாளரின் குடியிருப்பு நிலைமையின் கீழ்த்தரத்தைப்பற்றியும் ஸ்ரீஜுத் ஸித்வா கேட்டார்; இலங்கைப் பிரதமர் ஸ்ரீ சேனநாயக்காவுக்கும் தமக்குமிடையே ஏற்பட்ட பேச்சுக்களின் பயனுக மூலாதார விஷயங்களில் இலங்கைவாழ் இந்தியர் பிரச்சினை சம்பந்தமாக ஓர் சமரசம் ஏற்பட்டிருக்கிறதென்றும், இன்னும் இப்பிரச்சினை நன்கு ஆலோசிக்கப்பட்டபின் தீர்க்கமான முடிவு ஏற்படுமென்றும் பண்டிதர்நேரு தெரிவித்து மேலும் கூறியதாவது:

"1946-ம் ஆண்டுமுடிய இலங்கையிலே 467,011 இந்தியர் தோட்டத் தொழிலாளராக இருந்தனர். இந்த ஆண்டிற்குப் பின்னர் உள்ள புள்ளி விபரங்கள் கிடைக்கவில்லை.

"தோட்டத் தொழிலாளரின் குடியிருப்பு வசதிகள், ஸ்ரீஜுத் ஸித்வா கூறியவாறு அத்தகைய கேவலத்தில் இருக்கவில்லை. குடியிருப்பு வசதிகளை இன்னும் அபிவிருத்தி செய்ய இலங்கையரசாங்கம் முயற்சிசெய்கிறது. இவ்விஷயத்தில் எங்களுடைய நிலைமையையும் நாம் ஆலோசிக்கவேண்டும். நாம் இப்போதுதான் சுதந்திரத்தை யடைந்து அடிமைத்தனத்திலிருந்து சுதந்திரத்துக்குப் போய்க்கொண்டுள்ள நிலைமையில் இருக்கிறோம் இப்போது நாம் சிந்திக்கவேண்டிய கேள்வி இதுதான். அதாவது, இலங்கையில் வதியும் இந்தியத் தொழிலாளர் இந்தியப் பிரஜைகளா அல்லது இலங்கைப் பிரஜைகளா என்பதே.

"அவர்கள் இந்தியப் பிரஜைகள் அல்ல, இலங்கைப் பிரஜைகள் என்ற முடிவு ஏற்பட்டால், நாங்கள் பிரவேசிக்க முடியாது அவர்கள் இந்தியப் பிரஜைகள் ... ருல், அவர்கள் இலங்கையில் அந்நியராகிவிடுவர். அந்நியருக்கு எந்த எந்தச் சலாக்கியங்கள் செய்யவேண்டுமோ, அந்த அந்தச் சலாக்கியங்களை இலங்கை யரசாங்கம் செய்யவேண்டுமென எதிர்பார்ப்போம். இதுதான் மூலதாரப் பிரச்சினை.

"தாம் இலங்கைப் பிரஜைகளாகவேண்டிய சகல வசதிகளும் தமக்கு வேண்டும் என்று இலங்கைவாழ் இந்தியர் சார்பாகக் கூறப்பட்டது. எங்களுடைய கோரிக்கை என்னவென்ருல், குறிக்கப்பட்ட ஓர்காலத்துக்கு இலங்கையில் வசித்த எந்த இந்தியனும், அவன் இலங்கைப் பிரஜையாக விரும்பினுல், அவனுக்குப் போதிய வசதியளிக்கவேண்டும் என்பதே. இலங்கைப் பிரஜையாவதற்குரிய கதவுகளை நல்லாய்த் திறக்கவேண்டும். அதற்குள்ளால் பிரவேசித்துவிட்டால், அவர்கள் இலங்கைப்பிரஜைகளாகிவிட்டபின், அவர்கள் விஷயத்தில் நாம் ஒன்றும்கூற முடியாது.

"இதுவரை, இந்தியா, இலங்கை இரண்டும் பிரிட்டிஷாரின் பரிபாலனத்திலேயே இருந்தன. ஆகவே அப்போது, இந்தியர், இலங்கையர் என்ற பிரிவினை ஏற்படாது, எல்லாரும் பிரிட்டிஷ் பிரஜைகள் என்றே இருந்தனர். இப்போது அந்த நிலைமை இல்லை,

## நெல் அரிசி

### இன்னும் விலை குறைய உற்பாதம்

அரிசி நெல் விஷயமாக அரசாங்கம் தாராள மனப்பான்மைகொண்டு, கட்டுப்பாடுகளை நீக்கிவிட்டது. இதற்குத்தக்கதாக ஊரவர் நடக்கவேண்டும். கட்டுப்பாட்டு விலைக்கு மிஞ்சி நெல்லோ, அரிசியோ, சோற்றுக்கடைகளில் சோருே விற்கப்படுமானல், அவற்றை விற்பவர்கள்மீது அரசாங்கம் மிகவும் கண்டிப்பான நடைவடிக்கை எடுக்கும் என்று உணவுப்பகுதியதிகாரி ஒருவர் ஓர் பத்திரிகை நிருபர்க்குக் கூறினுர். உணவுப்பகுதி யதிகாரிகள் எவ்வாறு கூறினுலும், "கள்ளமார்க்கெற்" வியாபாரம் இவ்விஷயத்திற் குறையவில்லை என்றே தெரிகிறது.

அரிசி நெற் போக்குவரத்தில் இருந்த கட்டுப்பாடு நீங்கியபின் "கள்ளமார்க்கெற்"றில் 20 ரூபா தொடக்கம் 25 ரூபா வரை விற்ற நெல் புசலொன்று இப்போது அதேகள்ளமார்க்கெற்றில் இன்று 10 ரூபா தொடக்கம் 14 ரூபாவரையில் விற்கப்படுகிறது. அரிசி படி ஒன்று ஒரு ரூபா தொடக்கம் 1-25 வரையில் ஊருக்குத் தக்கபடி விற்கப்படுகிறது.

இதில் உள்ள விசேஷம் என்னவென்ருல் இந்தக் கள்ளமார்க்கெற் "வியாபாரிகள் எவ்வித அச்சமும் மனத்தாங்கலுமில்லாமல், துணிவுடன, கட்டுப்பாட்டு விலையான 8 ரூபாவுக்கு மிஞ்சி விற்பதும், அதனை ஊரவர் வாங்குவதுமேயாம். இந்த வியாபாரம் பகிரங்கமாக நடக்கவும், விலைக்கட்டுப்பாட்டு உத்தியோகத்தர் இந்த யாழ்ப்பாணத்தில் என்னதான் செய்கின்றனரோ தெரியவில்லை என்று ஊரவர் பேசிக்கொள்ளுகின்றனர்.

இப்போது யாழ்ப்பாணத்தின் பல பாகங்களில் நெல் அறுவடை முடிந்திருக்கிறது இன்னும் சில தினங்களில் ஊரில் போதியநெல் வந்து குவியுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. புசல் 8 ரூபா தொடக்கம் 9 ரூபாவரை விற்கவேண்டிய நிலைமை ஒன்று நிச்சயமாக ஏற்படப் போகிறதென்று எதிர்பார்க்கப்படுகிறது.

"இன்னும் இரண்டு மூன்று மாதங்களில் இலங்கை, பர்மா நாடுகளில் உள்ள இந்தியரின் நிலைமை தெளிவாகிவிடும்",

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாஸ்திகத்தை வேரறுத்த

# ஞான சூரியன்

முதலாம் பக்கத் தொடர்ச்சி

டதாகத் தோன்றியது. பரவிவரும் புயல்முன்னர் நட்டமாய் நிற்பது தான் சமுதாயத்துக்கு எவ்வாறு இயலும்! முன் பரவியிருந்த புனல் வறள மதப்பற்றின் உறுப்புககளெல்லாம் வாடிவதங்கி இற்றுப்போய்விட்டன. தொகுதி வாழ்க்கையின் உயர்நிலையான ஞான உணர்ச்சி மக்கள் மனத்தில் குடிகொள்ளாது அதனை விட்டகன்றது. மடிவெறுப்பு, பொய் வேடம், பொறியின்ப நுகர்ச்சி—பொல்லா இவையே வெற்றி தோன்றத் தாண்டவம் புரிந்தன. சமூகநிலை நிலைகுலைந்து வலியற்றிருந்தது.

ஆக இவ்வாறு சிறிதுகால அளவு (Materalism) என்னும்லோகாயதம் மேலோங்கியதெனக் காட்டியது. இந்த வாதத்தைச் சற்றே உற்று நோக்கித் தெளியவேண்டுவது அவசியம்.

கண்டதே காட்சி; கொண்டதே கோலம் என்ற அவர்களது சித்தாந்தத்தை மேலே கண்டோம். அக்கொள்கையின் முடிவு என்னவென்றால் நாம் காணும் தூலப் பொருளாலியன்ற உலகமொன்றே சாதமானது (உண்மையானது உறுதியானது) இதுவே அத்துறையில் இழிந்தவரது சித்தாந்தம் — முடிவாகக் கொண்ட உண்மை. ஆஸ்திக மக்களின் கொள்கையினை அவர்கள் அடியோடு தகர்த்தெறியத் தலைப்பட்டனர். பெருமையுடன் தோன்றி பெருநிலை பெற்று பெருவாழ்வு வாழ்ந்து வந்த இந்துமத தத்துவத்தின் அஸ்திவாரமே அழிந்துபோமோ என்றும் ஐயுறவேண்டியதான நிலை வந்துவிட்டது.

இத்தகைய தேச நிலையிலேதான் பரிசுத்த மூர்த்தி பரமஹம்சர் உடலெடுத்து ஞானப்பேறு படைத்து மக்கள்பாலுள்ள பொங்கும் பரிவால் இந்தியாவையும்—ஏன்!—உலகனைத்தையுமே காத்து வாழ்விக்க உதவினார். நம் நாட்டை உய்வுறச் செய்ததுடன் உலகத்திலுள்ள பிற நாடுகளுக்கும் வாழ்வளித்தனர்.

லோகாயுதம் என்னும் படுகுழியில் மக்கள் வீழ்ந்து அழிவுறு முன்னம் நம் நல்நாட்டினைக் காத்தளிக்கும் பழந்தெய்வம் முன்வந்து அதற்கு ஒரு உயர்ஞானக் குரவரைக் காட்டி அவரை வழிபடுமாறு தூண்டியது. இச்செய்கையால் இந்தியாவினால் பிற நாட்டவர்க்கு நல்கத்தகும் அரும்பெரும் பொருள்கள் உண்டென்பதையும் உலகம் நிலைகுலையாது உய்தற்கு இந்திய நாடு வாழவேண்டுமென்பதனையும் மக்கள் அறியலானார்கள். ஐம்புல உணர்ச்சி ஒன்றனையே மெய்யெனக் கொண்டு பொறியின்பத்தை ஆர நுகர்ந்து எய்த்து இளையாது அறிஞர்களுக்கும் எட்டா ஆன்ம தத்துவமொன்றுண்டு என்ற இந்துமதக் கொள்கையினை உணர்ந்து பிறவித் துயர் நீங்கி உய்யலாம் என்பது தெளிவாயிற்று; இன்பம் அளிப்பதாயிற்று. தகுதியமைந்த ஞானகுரு ஸ்ரீ ராமகிருஷ்ணரிடமாகத் தோன்றவும் மக்கள் திரள்திரளாக அவரையவாவி அணுக முற்பட்டனர். ஆத்மானந்தம பெற்றுத் திளைத்தனர்.

ஒரு அன்பர் அடிகளின் பெருமையைத் தொகுத்துச் சொல்லும்படத்துக் கூறுவதாவது: 'இந்து மதத்தின் ஆழத்திற்கும இனிமைக்கும் உயிர்கொண்டொளிரும் சாக்ஷியாய் இலகுவார் இப் புண்ணிய நற்புருடரே (ஸ்ரீ ராமகிருஷ்ண தேவர்) அவர் ஆக்கைப் பற்றினை அறவே களைந்தவர். அவரது உடலின்கண் ஆன்ம விளக்கமும் அறநெறியின் மெய்ம்மையும் ஆனந்தமும் இன்புருவாகும் தூய்மையும் ததும்பா நின்றன. இந்துமதத்தின் அறுதிப் பொருளுணர்ந்த துறவியரான தன்மையில் அப் பெரியார் உலகத்தின் புரையோடிய பொய்ம்மையினுக்கும் ஒரு வாய்ப்புடைய சான்றாய் மிளிர்கின்றார். அன்னாரது சான்று இந்துமதத்துப் பிறந்த ஒவ்வொருவரின் உள்ளத்தும் ஆழப் பதிந்து வேரூன்றும் பான்மையதாகும். 'அவ்வன்பர் ஆணவம் கழன்ற தமது வாழ்வில் நினைவானும் தொழிலானும் தொடர்பானும் நட்புரிமையானும் இறைவனையன்றி மற்று எதனையுமறியார். அவ் விறைவன் எய்துவிக்கும் மனத்திருத்தியே அவர்க்கு வேண்டிய அளவிற்கு விஞ்சிநிற்பதாகும். அவரது மாசற்ற மனத்தூய்மையும் பேசரும் பேரின்பப் பேறும், வரம்பிலா ஞானமும் குழந்தையென்ன அமைதியார்ந்த உள்ளமும் யாவர் மாட்டும் மேவுமோர் பரிவும இறைவன்பாற் கொண்ட தம் ஊனையும் உயிரையும் உண்ணும் உழுவலன்பும்—இவையே அவர் பெற்ற கைம்மாறுவன." என்னே குருதேவர் பெருமை! என்னே இந்தியாதுநாகரிகத்தின் பெருமை! இந்திய சரித்திரத்தில் நம்நாடு நிலைகுலைய நின்ற ஒரு அமையத்து தேவதூதராக வந்தமைந்த உயர் குருவால்—அவரது வாழ்க்கையின் மாண்பால் புத்துயிர் பெற்று வாழலாயிற்று. பெருவாழ்வு வாழ்தற்குரிய பேராற்றலை ஈந்தனர் அம்மகான் நம்நாட்டிற்கு. தற்காக்கும் இயற்கையறிவு படைத்த இந்தியநன்னாடு தன்னை உய்விக்க வந்த தோன்றலையுணர்ந்து போற்றிப் பின்பற்றியதுபோலும். அது பெற்ற உபதேசத்தின் விவரம் இக்கட்டுரையி லடங்காது.

—லோகோபகாரி

## மகாத்மா காந்தி வீதி

இற்றைக்குச் சிலவருடங்களுக்கு முன் மகாத்மா யாழ்ப்பாணத்துக்கு விஜயஞ் செய்தபோது, யாழ்ப்பாணம் மணிக்கூட்டுத்தெருவில் உள்ள ஓர் இல்லத்தில் தங்கியிருந்தார். அந்த இல்லம் இருக்கும் தெருவை, அடிகளாரின் ஞாபகார்த்தமாக மகாத்மாகாந்தி வீதி என்று நாமகரணம் செய்யவேண்டுமென்று, வண்ணார் பண்ணை ஆசிரியர் திரு. க நவரத்தினம் அவர்கள், யாழ்ப்பாணம் நகாசபைக்கு ஆலோசனை கூறியிருக்கிறார். இதனைப் பற்றி நகாசபையினர் ஆலோசித்துவருகின்றனர் கூடியசீக்கிரம் இவ்விஷயமாக ஓர் முடிவு செய்யப்படும்.

## பெண்கள் தேச ஊழிய சங்கம் யாழ்ப்பாணம்

இவ்வுலகமக்கள் யாவரின் உள்ளங்களையும் கவர்ந்து கொண்டவரும் உலகின் அரிய தந்தையாருமாகிய எம் பெருமான் காந்தி அடிகளாரின் தகனக்கிரியை நடைபெற்ற பதின்மூன்றாவது தினமாகும் வியாளக்கிழமை பிற்பகல் (12-2-48) 3-30 மணிக்குத் தேசஊழிய சங்கச் சகோதரிகளின்பஜனை ஊர்வலமானது கலாநிலயத்திலிருந்து புறப்பட்டு வித்தியாலயத்தை அடைந்து அடிகளின் ஆத்மா சாந்தியடையும் வண்ணம் ஓர் பிரார்த்தனைக் கூட்டம் நடைபெறும் இப் பிரார்த்தனைப் பொழுது அடிகளின் அன்பிற்குரியவராய இந்து - முஸ்லீம - கிறீஸ்தவ - பௌத்த மதங்களைச் சேர்ந்த சகோதரிகள் அனைவரும் பிரார்த்தனையிற் கலந்து பிரார்த்தனை புரிந்து ஏகும் வண்ணம் வேண்டிக் கொள்ளுகின்றோம்.

இம்மேலான பணியைத் தவறவிடாது நாமனைவரும ஒருங்கு கூடிப் பிரார்த்தித்து அஞ்சலி செய்வோமாக என்று ஷை சங்கத் தலைவி ஸ்ரீமதி மா. [illegible], [illegible] காரி ஸ்ரீமதி. [illegible] என்பவர்கள் தெரிவிக்கின்றனர்.

# மதமும் முன்னேற்றமும்

1-ம் பக்கத் தொடர்ச்சி

ஒவ்வொன்றுக்குமே அடிமையாகின்றான். கண் காது மூக்கு நாக்கு உடல் என்பன அடிமைப்படுத்துங் கருவிகள். ஒருவனுக்குப் பொறியுணர்ச்சி எவ்வளவு இருக்கிறதோ அவ்வளவுக்கு அவன் பிறருக்கு அடிமைப்பட்டே யாகவேண்டும். நாக்குக்கோ நல்லறிவைக் கொடுக்கும் பொருள்களுக்கோ அடிமையாகாத எந்தச் சீர்திருத்தவாதி இருக்கிறார்? இப்படி மனிதனுக்குத் தெரியாமலே மனிதனை அடிமை தனக்கு அடிமைப்படுத்தியிருக்கிறது. இன்று ஆணுக்குப் பெண்ணடிமை. பெண்ணுக்கு ஆணடிமை. இவற்றை உற்றுநோக்கின் அடிமை எங்கே இருந்து விளைகிறது. பொறியுணர்ச்சியிலிருந்தும் தேவைகளில் இருந்துந்தானே! மதமா அடிமையைவளர்க்கிறது! மனிதன் தான் இம்மைத் தேவையையோ மறுமைத் தேவையையோ விரும்பி மதத்திற்கு அடிமையாகின்றானே அன்றி, மதம அடிமைப்புத்தி புகட்டவில்லை யென்பது உறுதி.

அடிமையில்லாத மனிதன் யார்? எங்கிருக்கிறான்?

நாடு, நாட்டின் நிர்வாகம் நடப்பது கொள்கைகளால். அக்கொள்கைகட்கு மனிதன் அறிந்தோ அறியாமலோ அடிமையாகாவிட்டால் கொள்கை எப்படி நிலைக்கும். கொள்கை நிலைக்காதபோது அரசியல் வண்டி எப்படியோடும்-

முழுச் சுதந்திரநாடுகள் சிலவற்றை நோக்குவோம். 'மதம் உளுத்துப்போன உதவாககரைக் கொள்கைகள்' என்று எண்ணிப் பணஆசை பிடித்தே யலைந்த நாடுகள் சிலவற்றை நோக்குவோம்: அங்கு ஒரு தலைவன் தேர்ந்தெடுக்கப் பெறுகின்றான். மூன்று ஆண்டுகளோ ஐந்தாண்டுகளோ அவனாட்சி நடக்கின்றது. அவனைத் தலைவனாக்கியமக்கள் சட்டதிட்டங்களால் அவனுக்கு அடிமையாகித்தானே வாழ்கின்றனர். தலைவனும் அடிமையாக எண்ணி வாழ்கின்றான். என்றாவது தலைமையாக எண்ணின் அவனை இழித்துவிடுவர். ஆகவே மதஉணர்ச்சி வேண்டாம் என்ற நாட்டிலும் அடிமையுண்டு. சுதந்திரமிக்க நாட்டிலும் அடிமையுண்டு. அடிமையல்லார் யாருமில்லை. எங்குமில்லை சுதந்திரம் விடுதலை யென்றெல்லாம் அடிமையின் பரியாயப் பெயர்களே. பரிணாம நிலைகளே என்பது துணிவு. நாம இன்று ஆங்கிலேய ஆட்சியிலிருந்து விடுதலையடைந்தோம். ஆனால் சமுதாய ஆட்சிக்கு அடிமைப்பட்டோம். ஆதலால் அடிமையழியவில்லை.

மதத்தின் அடிமை எப்படிப்பட்டது? மதங் கூறும் அடிமை மனிதனுக்கு மனிதன் அடிமையாகும் மடமையல்ல மனிதனிடம் விளங்கும் அறிவுக்கடவுளுக்கு அடிமையாகும ஆண்மையாகும். உலக அடிமை வேண்டாமென்கின்ற அரசியற் கவிஞருங்கூட "பரிபூரணனுக்கே யடிமை செய்துவாழ்வோம" என்கின்றார். ஆகவே உண்மைச் சுதந்திரம், பரிபூரண இன்பம் சுதந்திரம் மதங் கூறும் இறையடிமையில் அல்லவா இருக்கிறது. அன்றியும் மதஅடிமை மனிதன் தன் குறையை யுணரச் செய்கின்றது. கடவுள் குறைவிலா நிறைவாக இருப்பதால் தன் குறையை நிறைவித்துக்கொள்ளத் தூண்டுகிறது. வயிறு பசித்தவன் வள்ளல் வீட்டு வாயிலை காத்து நிற்பதுபோல அறிவு வேண்டியவன் அறிவாளிவீட்டைக் காப்பதுபோல பேசத்தெரியாதவன் பேச்சாளன் முன்வாய் திறந்து நிற்பதுபோல நிறைவிற்காக இறைவன் [illegible] வாயிலில் நிற்கச் [illegible] குறைவுடையவன் இறைவன் சேவகர் முன்னிற்பதுபோல இறைவனடியார் முன்நிற்கச் செய்கின்றது இதுவா அடிமை. இது அடிமையானால் எடுத்துக் காட்டப் பெற்றஅவைகளையும் அடிமையென்று கூறத் துணிவீர்களா!

சுதந்திரத்திற்கும் மத அடிமைக்குமுள்ள வேறுபாடு:- உலகியல் சுதந்திரம் மனிதனுக்கு மனிதன் அடிமையாக்குகிறது. உடல் உழைப்பை மட்டும் வளர்க்கிறது. சடவுணர்ச்சி தருகின்றது. பொறாமையையும் போட்டியையும் கலகத்தையும் வளர்க்கின்றது.

மதஅடிமை மனோசக்தியை வளர்க்கிறது. தன்னம்பிக்கை, ஜடர் எய்காதென்ற உறுதி இவற்றைத் தருகின்றது. ஆடம்பரத்திற்கும் அதிகாரத்திற்கும் அதட்டலுக்கும் உருட்டலுக்கும் பணியாத உண்மைச் சுதந்திரம் அளிக்கிறது. பொறிகளை யடக்கியாளும் பெருவீரம் அளிக்கின்றது. இரண்டிற்குமுள்ள வேற்றுமை மலைக்கும் மடுவுக்கும் உள்ள வேற்றுமை. ஆனாலும அது சுதந்திரம். இது அடிமையென அழைக்கப்பெறுகிறது. இது மங்கல வழக்குப்போலும்.

திருவடி யென் தலைமேல் வைத்தாய் என்ற அடிமைச் சின்னத்தைப் புனைந்துரைத்த அப்பரடிகளை ஆம்றேனடியேன் என்று மதஅடிமையில் ஊற்ப்பழுத்துப் படிப்பாரையும் ஊறவைக்கும அப்பரடிகளை, பல்லவ அரசன் அழைக்கின்றான். எத்தகைய மறுமொழி அவர் வாயில் வருகிறது, அது அடிமையுரையா! அரசர்க்கும ஆணையிடும் வீரவுரையா? உண்மையில் அடிமையாயிருந்தால் வீரவுரை வருமா? அவ்வுரைதான் "நாமார்க்குங் குடியல்லோம் நமனையஞ்சோம்" இந்த எழுச்சியுரை எதனால் எழுந்தது. சங்கரன் சங்க வெண்குழையோர் காதிற் கோமாற்கேமீளா ஆளாய் இருந்த எடுப்பினாலன்றோ! ஆதலால் மத அடிமை எதனைத் தருகிறது? கடவுளையன்றி வேறொருவருக்கும் அடிமையாகாத ஆண்மையையன்றோ! இந்த நிலையைத்தான் ஞானசாத்திரம் அணைந்தோர்தன்மை கூறும் பன்னிரண்டாஞ் சூத்திரத்து

"எங்குமியாம் ஒருவர்க்கும்
எளியோம் அல்லோம
யாவர்க்கும் மேலானோம்
என்றிறுமாப் பெய்தித்
திரிந்திடுவர்"

எனத் தெரிவிக்கின்றது,

ஆகவே இதனை நன்காராய்ந்து உலகியலிற் சுதந்திரம என்ற அடிமையா கடவுள் கொள்கையில் அடிமையென்ற சுதந்திரமா வேண்டப்படுவது சிறந்தது என்பதைச் சிந்தியுங்கள்.

ஆதலால் மதம் வளர்ப்பது உண்மைச்சுதந்திரத்தை. அரசியல் வளர்ப்பது உண்மையடிமையை யென்பது தெளிவு.

இதனை யாய்ந்து மதம் அடிமையைத்தான் வளர்க்கின்றது என்று அறிவுத்துணை கொள்வார் அறுதியிடுவாராயின் அதுவும் அறிவுத்துறைக்கு ஏற்புடைத்தாயின் நாம் அதனை வரவேற்போம்,

## பாபு இராஜேந்திரப்பிரசாத்

இலங்கையின் சுதந்திர தினக் கொண்டாட்டத்திற் பங்குபற்ற, இந்தியாவின் சார்பாக, காங்கிரஸ் தலைவர் பாபுராஜேந்திர பிரசாத் அவர்கள் இங்கு விஜயம் செய்வாரென முன்னர் அறிவிக்கபபட்டது. ஆனால் அவர் இப்போது சுகவீனமுற்றிருப்பதால், அவருடைய இடத்துக்குச் சென்னை அரசாங்க மந்திரி டக்ரர் பீ. சுப்பராயன் இங்கே விஜயஞ்செய்வார்.

## வியாபாரத்திற்கழகு விளம்பரஞ் செய்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவபரிபாலனசபை ஆச்சிரமநிதி

## பணம் உதவியோர் விபரம்

| | | | |
|---|---|---|---|
| முற்கணக்குப்படி | 4461 50 | S தில்லையம்பலம் | 10 00 |
| K இராசா | 5 00 | V வேலுப்பிள்ளை | 5 00 |
| S A P மாரிமுத்துப்பிள்ளை | 25 00 | S இரங்கநாதன் | 10 00 |
| T சரவணமுத்து | 10 00 | T குமாரசுவாமி | 10 00 |
| S R செல்லத்துரை | 10 00 | A நல்லதம்பி | 10 00 |
| பி கு நா சடை | 25 00 | N நடராசா | 20 00 |
| S A கந்தையாச்செட்டி | 2 00 | A சண்முகம் | 50 00 |
| பழ சோ ம | 15 00 | K சுந்தரம்பிள்ளை (ஒருபகுதி) | 10 00 |
| Bharat Studio | 5 00 | A முத்துத்தம்பி (ஒருபகுதி) | 10 00 |
| K இரத்தினம் | 10 00 | T காராளசிங்கம் | 5 00 |
| S அருணாசலம் | 25 00 | ச அம்பலவாணர் (ஒருபகுதி) | 25 00 |
| K K சங்கரப்பிள்ளை | 5 00 | அ சி கனகசபை (ஒருபகுதி) | 10 00 |
| C S நமசிவாயம்பிள்ளை | 25 00 | இ க கந்தையா | 10 00 |
| N P M C பொன்னம்பலம் | 20 00 | K சுப்பையா | 2 00 |
| சீதா சோடாக்கொம்பெனி | 25 00 | மு சின்னத்துரை | 2 00 |
| K M S மாணிக்கவாசகம்பிள்ளை | 25 00 | சோ இராசரத்தினம் | 5 00 |
| P துரையப்பா | 5 00 | மு நமசிவாயம் | 5 00 |
| T திருச்சிற்றம்பலம் | 25 00 | மு குமாரசாமிப்பிள்ளை | 10 00 |
| M செல்வத்துரை | 25 00 | சு வீரசிங்கம் | 5 00 |

ஆகக் கூடியது 4962 50

தி. இராசநாயகம்
தனாதிகாரி

M 226—20-12-48 10-2-48.

## தேகவியோகம்

ஐ. பொன்னையா

ஏழாலை திரு. ஐ. பொன்னையா அவர்கள், தம்மைப் பீடித்து வருத்திய நோய் காரணமாக சென்ற ஜனவரி மாசம் 31 உ சனிக்கிழமை, ஏழாலையிலுள்ள தமது இல்லத்திற்றானே தேகவியோகமாயினர். இவர் சைவத்திற்கும் தமிழுக்கும் தமது வாழ்க்கையை அர்ப்பணஞ் செய்தவர்களுள் ஒருவராவர். சைவசித்தாந்த சாத்திரங்களை நன்குணர்ந்து அவற்றின்படி ஒழுகியவர் வாக்கு வன்மை யுடையவர்; தாம் எடுத்த விஷயங்களைக் கேட்போர் உள்ளத்திற் பதியும்படி பேசுவார்; மேலும் இவர் பாரம்பரிய வைத்தியராவர்; அச்சில் வெளிவருதலின்றி மறைத்து வைக்கப்பட்டிருந்த பராசசேகரம் முதலிய அரிய வைத்திய நூல்களை நன்கு ஆராய்ந்து பிழையறத்திருத்தி எவருக்கும் பயன்படும்வண்ணம் செய்தவர். இப்பெரியாருடைய பிரிவு சைவத்திற்கும் தமிழ் வைத்தியத்திற்கும் குறையாகுமெனச் சொல்லுதல் மிகையாகாது. இவரது ஆன்மாசாந்தியடைக.

●

வீ. ஏகாம்பரநாதர்

மீசாலை திரு. வீ. ஏகாம்பரநாதர் தம்மைச் சிலநாட் பீடித்து வருத்திய நோய்காரணமாக, சென்ற ஜனவரி மாசம் 31 உ சனிக்கிழமை மீசாலையிற் தமது இல்லத்திலேயே மனைவி மக்கள் சகோதரர் சுற்றத்தார் மாணாக்கர் துயருற இவ்வுலக வாழ்வை யொருவினர். இறக்கும்போது இவருக்கு வயசு 72. இவர் ஏகாம்பர உபாத்தியாயர் என்று அழைக்கப்படுவர்; ஆசிரியர் ம. க. வேற்பிள்ளை அவர்களுடைய சிறந்த மாணாக்கர்களுள் இவருமொருவராவர்; பல மாணவர்க்குத் தமிழ்க் கல்வி பயிற்றி வந்தவர். சைவ ஆசாரம் ஒழுக்கம் தெய்வபத்தி முதலாம் நன்மைகளோடு கூடியவர். இவருடைய ஆன்மா சாந்தியடைவதாக.

## அனுதாபக் கூட்டம்

சாந்த மூர்த்தி காந்தியடிகளின் பிரிவினால் ஏற்படும் துக்கம் நம்மால் விவரிக்கக்கூடிய ஓர் காரியமல்ல என்று கடந்த (2-2-48) திங்கட்கிழமை காலை 9 மணிக்கு மட்டக்களப்பு சிவானந்த வித்தியாலயத்தில் நடைபெற்ற அநுதாபக் கூட்டத்தின் போது தலைவர் திரு S அம்பலவாணர் B. Sc (Lond) தமது தலைமைப் பேருரையிற் குறிப்பிட்டார். அவ்வமயம் வித்தியாலய ஆசிரியர்கள் பலர் காந்தியினுடைய அரும் பெருஞ் செயல்களையிட்டுப் பேசினார்கள். பின்னர், மகாத்மா காந்தியின் பிரிவினால்

## கும்பாபிஷேகம்

புங்குடுதீவு பாணாவோடைச் சிவாலயக் கும்பாபிஷேகம் (23-1-48 வெள்ளிக்கிழமை சிவ ஸ்ரீ மு. வைரவநாதக் குருக்கள் அவர்களாற் சிறப்பாகச் செய்து வைக்கப்பெற்றது. கும்பாபிஷேகத்தின் பின் 'சிவ ஆலய வழிபாடு" என்னும் பொருள்பற்றியும் 'கும்பாபிஷேகத்தின் பொருள்' பற்றியும் முறையே சிவ ஸ்ரீ மு. வைரவநாதக் குருக்கள் அவர்களும் சிவ ஸ்ரீ ஐ. முத்துக்குமார சுவாமிக் குருக்கள் அவர்களும் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். திரு நீ. சேதுபதியவர்கள் குறிப்புரை கூறினார்கள். அடுத்தநாள் இரவு யாழ்ப்பாணச் சைவபரிபாலன சபை யாதரவில் 'சிவனடியார் மகிமை' என்னும் பொருள் பற்றியும் முறையே திரு மு. மயில்வாகனம் அவர்களும் திருப்புகழ் திரு வ. சுப்பிரமணியம் அவர்களும் உபந்நியாசங்கள் செய்தார்கள். சிவ ஸ்ரீ. மு. வைரவநாதக் குருக்கள் குறிப்புரை கூறினார்கள். இவற்றின் பின் திருக்கலியாண வைபவம் நிகழ்ந்தது. கடித.

## குளோஸ்டர் கோமகனுக்கு வரவேற்பு

சென்ற ஞாயிற்றுக்கிழமை மாலை 4 10 மணிக்கு மன்னர்பிரான சகோதரரான குளோஸ்டர் கோமகன் தமது குடும்ப சகிதமாக இலங்கையின் முதலாவது டொமினியன் பாராளுமன்றச் சபையைத் திறந்து வைப்பதற்காக கட்டுநாயகா விமான நிலையத்தில் வந்திறங்கி அங்கிருந்து கொழும்பு நகருக்கு ஊர்வலமாக அழைத்துவரப்பட்டார்.

21 மைல் நீளமான இவ்வூர்வலத்தின் போது வழிநெடுக உள்ள பல நகரங்களிலும் அவர்கள் பொது ஜனங்களின் ஆனந்தமான வரவேற்புக்களை ஏற்றுக்கொள்வதற்காகச் சற்றுத் தாமதித்தனர்.

விமான நிலயத்தில் அவர் வந்திறங்கியதும் கவர்னர் ஜெனரல் ஹென்றிமாங்க் மேஸன்மூர் தம்பதிகள் அவர்களை எதிர்கொண்டு வரவேற்றனர். பின்பு பிரதமர் டி. எஸ். சேனநாயக்காவும் இதர மந்திரிகளும் கோமகனுக்கு உத்ஸாக வரவேற்பளித்தனர்.

குளஸ்டர் தம்பதிகள் விமானத்திலிருந்து இறங்கியதும் அதனை அறிவிப்பதற்காக காலிபேஸ் திடலிலிருந்து 21 மரியாதைக் குண்டுகள் சுடப்பட்டன.

தொடர்ந்து பதின்மூன்று நாட்களுக்கு வித்தியாலயத்தினர் பிரசித்த [illegible]

# கந்தபுராணக் கவி நுட்பம்

## திருவிளையாட்டுப் படலம்

வித்துவசிரோமணி ந. ச. பொன்னம்பலப்பிள்ளை யவர்கள் வாய்க்கேட்டெழுதப்பெற்ற பிரதியிலிருந்து எடுத்த அரும் பெருங் குறிப்புக்கள் இப் [ ] பகரக் குறியீட்டுடன் வெளியிடப்பட்டுள்ளன.

முண்டக னொருவன் றஞ்ச முராரிபே ருருவாய் நேமிக்
கண்டுயி லகந்தை நீங்கக் கண்ணுதற் பகவனெல்லா
அண்டமு மணிப்பூணா மாகவே யாங்கோர் மேனி
கொண்டன னென்னுந் தன்மை குமரநின் வடிவிற் கண்டேம்.

பிரமா ஒருவர் இறக்க, அக்கற்ப காலத்திலே, விஷ்ணு பெரியவடிவங்கொண்டு பாற்கடலில் அறிதுயில் செய்யும்போ துண்டாகும் அகங்காரம் நீங்கும் வண்ணம், நெற்றிக் கண்ணையுடைய சிவபெருமான் சகல அண்டங்களும் அழகிய மாலையாக வமைய அக்காலத்திலே கொண்டருளும் பரமேசுவரத் திருக்கோலமென்று சொல்லத்தக்க மேன்மையைக் குமாரக்கடவுளே, இப்பொழுது) தேவரீருடைய திருக்கோலத்திற் கண்டுள்ளோம் என்பது கருத்து.

"கண்ணுதற் பகவ னெல்லா வண்டமு மணிப்பூணாமாகவே........ மேனி கொண்டன னென்னுந் தன்மை" என இத்திருவிருத்தத்தில் எடுத்துக் காட்டப்பட்டுள்ள சிவபரத்துவம் இப்புராணத்தில்வரும் ததீசியுத்தரப் படலம், அடிமுடி தேடுபடலம் முதலியவற்றில் விரித்துக்கூறப்பட்டுள்ளன. மகாதேவன் சர்வசங்கார காலத்திலே கொள்ளும் பெரிய வடிவத்திற்கும் தேவரீர் இப்பொழுது கொண்டுள்ள திருப்பெரு வடிவிற்கும் பேதமில்லை யெனத் தேவர்கள் சொல்லி முருகக் கடவுளைத் துதித்தவாறும். (96)

நாரணன் மலரோன்பன்னாள் நாடவுந்தெரிவின் றாகிப்
பேரழலுருவாய் நின்றபிரான்றிரு வடிவேபோலுன்
சீருரு வுள்ளதம்மா தெளிகில ரவரும் எந்தை
ஆரரு ளெய்தினம்போ லடிமுடி தெரிந்தி டாரோ.

அரி பிரமர் பலகாலமாகத் தேடியும் (அடி முடி) காண்டற்கரியதாய் பரமேசுவரன் கொண்டருளிய அக்கச் சோதிவடிவம் போலத் தேவரீருடைய திருவடிவமும் விளங்குகின்ற; அங்ஙனம் பெருமானுடைய அடிமுடிகளை அப்போது தேடிக்காண முடியாதவர்களாகிய அவ்விருவரும், எம்பெருமானுடைய பூரண அநுக்கிரகத்தை நாங்கள் பெற்றவாறு பெற்றிருந்தால் அப்பெருமானுடைய அடிமுடிகளை (அக்காலத்திலே) தரிசித்திருப்பார்க ளல்லரோ என்பது கருத்து.

எம்பெருமானே, அக்காலத்தில் மகாதேவர் கொண்டருளிய சோதி வடிவத்திற்கும், இப்போது தேவரீர் காட்டியருளும் சோதி வடிவத்திற்கும் பேதமில்லை, பெருமான் கொண்டசோதி வடிவத்தை அரிபிரமர் அக்காலத்திற் காணமுடியாமைக்குக் காரணம், அவர்கள் அகந்தையோடு கூடி நின்றமையின், இறைவன் அவர்களுக்கு அருள் செய்யாமையாகும்; இப்போது தேவரீர் கொண்ட சோதி வடிவத்தை நாங்கள் அடிமுதல் முடியின் காறும் தரிசிக்கும்பேறு தேவரீர் எங்கள்மீது வைத்துள்ள திருவருளினாற் கிடைக்கலாயிற்று; அரி பிரமரும் இங்ஙனம் செய்திருப்பரேல் எம்பெருமானுடைய அடிமுடியை அக்காலத்திலே தரிசித்திருப்பர் எனத் தேவர்கள் போற்றியவாறும். அவனருளாலே அவன்தாள் வணங்க வேண்டும் என்றபடி. "தெளிகிலரவரும்" என்பதை வினையாலணையும் பெயராகக்கொண்டு பொருள் கூறலுமாம்; "எந்தை" யென்னுஞ் சொல் இங்கே பரமசிவனுக்கும் முருகக் கடவுளுக்குஞ் சிலேடையாக நிற்றல் காண்க.

## சுதந்திரத்தின் விலை

### மரணம்தான் என்கிறார் மகாத்மா

சுதந்திரம் என்பது லேசான ஒரு விஷயமல்ல அதனை உயிர் கொடுத்துத்தான் பெறவேண்டும். சுதந்திரத்துக்கு விலை மரணம்தான் என்று மகாத்மா காந்தியடிகள், தாம் இறக்குமுன், பீக்கானீர் சமஸ்தானத்தைச் சேர்ந்த டகார் கோபி கூர்பக்ஸ் என்பவர்க்கு எழுதியுள்ள கடிதமொன்றிற் குறிப்பிட்டார்.

டக்ரர் கூர்பக்ஸ் அவர்களும் அவர் மனைவியும் நெடுங்காலமாக மகாத்மாவின் சேவக்கிராம ஆஸ்ரமத்திலிருந்து சேவை ஆற்றியுள்ளவராவர்,

தாம் இறக்கச் சின்னாட்களுக்கு முன் எழுதிய கடிதத்தில் காந்தியடிகள் பின்வருமாறு குறிப்பிட்டார்,

"நாங்கள் சுதந்திரத்தைப் பெற்றுவிட்டோம். ஆனால் அதற்குரிய விலையை, தியாகத்தை ஆற்றிவிட்டோமா? இல்லை. சுதந்திரத்துக்கு விலை மரணம்தான், உயிரைக் கொடுத்தே சுதந்திரத்தைப் பாதுகாக்கவேண்டும்.

"இன்று எங்கள் நாட்டில் நடப்பன யாவற்றுக்கும் நாங்களே பொறுப்பாளிகள். ஆகவே இதெல்லாம் இயற்கையின் திருவிளையாட்டு என்று சொல்லக்கூடாது. இயற்கைக்குக் கையில்லை, காலில்லை இயற்கை எங்கள் மூலமாகவே தன் திருவிளையாடல்களைச் செய்கிறது ஆகவேதான், இங்கு நடப்பன யாவற்றுக்கும் நாம்தான் காரணர் என்றேன்",

## இன்று பாராளுமன்ற அங்குரார்ப்பணம்

இன்று காலை பத்தரை மணிக்கு, சுதந்திர இலங்கையின் முதற்பாராளுமன்றத்தை மன்னர்பிரானின் சகோதரரான குளோஸ்டர் கோமகனால் அங்குரார்ப்பணம்செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இந்த அங்குரார்ப்பண விழாவில் பல்லாயிரக் கணக்கான மக்கள் கலந்துகொள்வர். பாராளுமன்றத்தை அங்குரார்ப்பணம் செய்தபின், குளோஸ்டர் கோமகன் ஓர் பிரசாரணம் செய்ய ஒழுங்கு செய்யப்பட்டிருக்கிறது

யாழ்ப்பாணத்திலும் இன்றைய தினம் மிகவும் மங்கலகரமாகக் கொண்டாடப்படுகின்றது.

## ஹிந்துமகாசபைத் தலைவர்கள் சிறை

அகில இந்திய ஹிந்துமகாசபையின் முந்திய தலைவர் வீரசவர்க்கார் உட்படப் பல ஹிந்துமகாசபை யதிகாரிகளைச் சென்றவாரம் இந்திய அரசாங்கம் சிறை செய்திருக்கிறது. இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியை ஒழித்து, ஹிந்துராஜ்யம் ஒன்றை நிறுவ அக்காலத்திலே சாலவொணாத்தியாகம்புரிந்தவர் வீரசவர்க்கார்.

சென்ற 4ந் திகதி வீரசவர்க்கார், மகாத்மாவின் கொலைசம்பந்தமாக ஹிந்து மகாசபைக் கொள்கையை விளக்கி ஓர் அறிக்கை விட்டிருக்கிறார். அதில் மகாத்மாவின் கொலையைப் பலமாகக் கண்டித்து, இந்தியமக்கள் அனைவரும் ஒற்றுமையுடன இருக்கவேண்டும் என்று கேட்டிருக்கிறார்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண ஐக்கியலாபநிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பண ரூபா

**134,3670**

**100 ரூபா விகிதமான 8000 பங்குகள்**

பங்குப்பணங் கட்டுமுறை.

மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு

எச்சமித்து சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானுல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாநோட்டு வட்டத்திறகு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (இடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக்கொடுக்கலாம். இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிறுப்பர்.

Std. 14 20-11-46—20-11-47 (தி)



# நாவலர் பதிப்பு நூல்கள்

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் பதிப்புப் புத்தகங்கள் வருகிற புதன்கிழமை (11—2—48) தொடக்கம் இச் சைவப்பிரகாச யந்திரசாலையிற் கிடைக்கும். வாங்க விரும்புவோர் ஏககாலத்தில் (25) இருபத்தைந்து ரூபாவிற்குக் குறையாமற் புத்தகங்களை வாங்குதலாகும். மனேஜர்

## புத்தக விலை விபரம்

| | | |
|---|---|---|
| 1 | கந்தப்புராணம் செய்யுள் | 9 60 |
| 2 | கந்தப்புராண வசனம் | 6 00 |
| 3 | திருக்குறள் உரை | 6 00 |
| 4 | பெரியபுராண செய்யுள் | 6 00 |
| 5 | திருவிளையாடற் புராண செய்யுள் | 4 20 |
| 6 | பாரதம் ஆதிபாவம் உரை | 4 20 |
| 7 | சேதுபுராணம் | 3 60 |
| 8 | திருக்கோவையார் உரை | 3 60 |
| 9 | தொல்காப்பியம் சேனாவரையம் | 3 60 |
| 10 | இராமாயணம் பாலகாண்டம் | 3 00 |
| 11 | நன்னூற்காண்டிகையுரை | 4 20 |
| 12 | நன்னூல் விருத்தியுரை | 4 20 |
| 13 | அருட்பா | 2 16 |
| 14 | கோலைமறுத்தலாதி | 1 80 |
| 15 | பெரியபுராண வசனம் | 3 00 |
| 16 | திருவிளையாடல் வசனம் | 2 40 |
| 17 | சைவசமய நெறியுரை | 1 50 |
| 18 | நாவலர் சரித்திரம் | 1 50 |
| 19 | இலக்கணச் சுருக்கம் | 90 |
| 20 | திருமுருகாற்றுப்படையுரை | 40 |
| 21 | அபிராமியந்தாதி உரையுடன் | 30 |
| 22 | சிவ லய தரிசன விதி | 25 |
| 23 | நான்காம் பாலபாடம் | 1 50 |
| 24 | இரண்டாம் சைவவினாவிடை | 80 |



# நாதன்ஸ் பிரசுரம்

மலேயாவுக்குச் சகல வசதிகளுமடங்கிய
பிரயாணக் கட்டணம் குறைக்கப்பட்டிருக்கிறது

யாழ்ப்பாணம் - சென்னை - பினங் ரூபா 170
,, நாகபட்டணம் 115

யாழ்ப்பாணமிருந்து சென்னைவரை றெயில் இரண்டாம் வகுப்பு
அன்றேல் ஆகாயவிமானத்தில் உல்லாசப் பிரயாணம்
கப்பலில் டெக் உட்படக் கட்டணம் ரூபா 190

எஸ். ஆர். எஸ். நாதன்

21/3, ஸ்ரான்லி றேட் :: யாழ்ப்பாணம்
எங்கள் கிளைஸ்தாபனங்கள்: சென்னபட்டணம், நாகபட்டணம்,
சிங்கப்பூர், கொழும்பு முதலியவிடங்களி லுண்டு

Std 22. 6-6-47—6-6-48



# பசந்த லேகியம்

இதனல் மூலச்சூடு, இருமல் பித்தப் பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கைகால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச் சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, வெள்ளை, சூலை, சந்து வாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும், இந்திரியம் கட்டுப்பட்டு, தேக புஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்க்காணுதலால்நேரிடும் பல நோய்களும்தீர்ந்து, தேகத்துக்குப் பலம் உண்டாக்கும்.

ஒருறுத்தல் விலை ரூபா 25
அரைறுத்தலுக்கு ரூபா 12-50
கால்றுத்தல் ரூபா 6-25

விலாசம்:

க. ஆறுமுகம்பிள்ளை

கி, 156, செக்கடித்தெரு கொழும்பு

Std. 1. 26—3—47 to 1—4—48



# கந்தசாமி வைத்தியர்
## அமிர்த சர்க்கரை லேகியம்

தாதுவிருத்தி யுண்டாகி நரசிங்கம் போன்ற தேக பலத்தைத் தருவதில இணையற்ற லேகியம். நெடுநாட்பட்ட வாதங்கள் எவற்றையும் தீர்க்கும். பித்தக் கிறுகிறுப்பு பாண்டு குன்மம் நித்திரையின்மை மூளைக் குழப்பம் இருமல் அரிகுரல் குடற்புண் மலக்கட்டு மூலவாய்வு அசீரணம் இவைகளை மாற்றி நல்ல பசி உண்டாக்கும். மேகம் மேகத்தடிப்பு நீரழிவு நீர்க்கடுப்பு நீங்கும். கெற்பனிகட்கு உண்டாகும் வாந்தி அரோசியம் இருமல் மலசலக்கட்டு நீங்கும். கருவை அழியாமல் காக்கும். பாலர்கட்கு கணை பாண்டு இராக்காய்ச்சல் இருமல் தீர்க்கும் இணையற்ற சஞ்சீவி.

பெரியவர்கள் காலை மாலை 1 கழஞ்சு வீதம். சிறியவர்கள் காற் களஞ்சு அரைக்கழஞ்சு வீதமும் சாப்பிடலாம்

**கால் றுத்தல் விலை ரூபா 5-00**

வீ. பீ. பி. யில் அனுப்புவோம்.

விலாசம் :

ஆயுள்வேத சிவசோதி மெடிக்கல்ஹோல்
— வல்வெட்டித்துறை —

Std 25 1-7-47—30-6-48 (செ)



# இலங்கைவங்கி

(1938-ம் ஆண்டு 53-ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி சட்டபூர்வமாக இணைக்கப்பட்டது)

## இலங்கை அரசாங்கத்தின் வங்கிக்காரர்

| | | |
|---|---|---|
| வாக்களிக்கப்பட்ட மூலதனம் | ரூபா | 4, 500, 000, 00 |
| கொடுக்கப்பட்ட வேதனம் | ,, | 3, 000, 000, 00 |
| [illegible]நிதி | ,, | 2, 600, 000, 00 |

தலைமைக்காரியாலயம்:- பிரிஸ்ரல்வீதி, கொழும்பு.

நியுயோர்க் ஏஜெண்டுகள்:- ஏர்விங் ட்ரஸற் கம்பனி.

லண்டன் ஏஜெண்டுகள்:- பார்க்கிலேஸ வங்கி,

கிளைக்காரியாலயங்கள்:- புறக்கோட்டை, (கொழும்பு) கண்டி, காலி. திருக்கோணமலை, பாணந்துறை, குருநாகலை (பழைய நகரமண்டபம்), வதுளை

யாழ்ப்பாணத்துக் காரியாலயம்:- 242, ஆஸ்பத்திரிறேட், யாழ்ப்பாணம்.

வாடிக்கைகாரர்களுக்குப் பல விசேஷ வசதிகள் இவ்வங்கி செய்துகொடுக்கின்றது.

**நடைமுறைக்கணக்கு:-**

இலங்கையில் (திருக்கோணமலையை குருணாக்கல், வதுளை ஒழிந்த) உள்ள எல்லாப் பிரதான நகரங்களிலும் மாற்றக்கூடிய "செக்"குகள்கொமிஷன் இன்றிப் பெற்றுக்கொள்ளப்படும்.

**சேமிப்புப் பணம்:-**

ஆகக்கூடிய தொகை ரூபா 10, 000. வட்டி நூற்றுக்கு வருடம் ஒன்றுக்கு 2 விகிதம் கேட்டநேரம் திருப்பிக் கொடுக்கப்படும்.

**நிரந்தர சேமிப்பு:-**

இதற்கான விகிதம் முதலியவற்றைக் கேட்டு அறிந்து கொள்ளலாம்.

**கடன்களும் மேலதிகமாகக் கடன் பெறுதலும்:-**

அங்கீகரிக்கப்பட்ட பிணையின் பேரிற் கொடுக்கப்படும்.

**நாணயமாற்று:-**

இதற்கான ஏஜெண்டுகள் உலகெங்கும் உண்டு.

**பிறநாட்டு விவகாரப் பகுதி:-**

ஜீ. ஓ. எச். கட்டிடம், யோர்க் வீதி, கொழும்பு,

இந்தியா, மலாய்நாடுகளுக்கு அனுப்பக்கூடிய உண்டியல், தந்தி, மாற்றுப் பத்திரங்கள் விஷயமாக விசேஷ வசதிகள் செய்து கொடுக்கப்படும்,

T. S. முத்துலிங்கசாமி
ஏஜெண்டு,

Std. 7-8;29 1-8—30-4


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai Jaffna, on Tuesday, February 10. 1948

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org